M ICC 4327



# களம் ஆடிய

கவிஞர்

## காசி ஆனந்தன்

பா. சின்னத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/800/A327

800

# களம் ஆடிய கவிஞர் காசி ஆனந்தன்

பா. சின்னத்துரை

தமிழன் பதிப்பகம்,
மட்டுநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு: 15.4.75.

விலை ரூபா. 1.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சொல்..!

இச்சிறு நூலில் உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை எழுதி வைக்கிறேன்.

வெறும் குறிப்புக்களாக இல்லாமல் கொஞ்சம் விறுவிறுப்பாகவும் இதை நான் ஆக்கியிருப்பதால் இந்நூல் ஒரு வீர காவியம் ஆகிறது.

கவிஞரையும் — அவருடைய தாய் தந்தையர் சகோதரர் உறவினர் நண்பர் ஆகியோரையும் கலந்து இக்குறிப்புக்களை நான் தயாரித்தேன்.

வருங்காலத்தில் கவிஞரின் விரிவான வாழ்க்கை வரலாற்றை எழுதுகிறவர்களுக்கு இதிலுள்ள சிறு குறிப்புக்கள் துணைபுரியும் என்பது உண்மை.

கவிஞரின் வாழ்வில் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகள் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற காலங்களை இந்நூல் சரியாகவும் ஒழுங்காகவும் எடுத்துக் கூறுகிறது.

உணர்ச்சிக் கவிஞரின் வரலாறு ஒரு தனி மனிதரின் கதையல்ல என்பதை நாம் அறிவோம்.

இருபது ஆண்டுகள் இலங்கைத் தமிழர் விடுதலை இயக்க வரலாற்றோடு அவர் இரண்டறக் கலந்து நிற்கிறார்.

கவிஞரின் இரத்தம் வியர்வை கண்ணீர் கலந்த அவர் வீர வாழ்வை — தியாக காவியத்தை இப்படி ஒரு சின்ன அளவிலாவது எழுத — எனக்கு நினைவு தந்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

தமிழ் இனத்தார் நெஞ்சங்களில் இந்நூல் தணியாத விடுதலைத் தாகத்தை வளர்ப்பதாக.

**பா. சின்னத்துரை.**

தமிழன் பதிப்பகம்,
மட்டுநகர். 15.4.75.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

கவிஞன் பிறக்கிறான்; அவன் 'செய்யப்படுவது' இல்லை! பிறவிக் கவிஞனது கவிதைகள் அவனது உள்ளத்தின் ஆழத்தி லிருந்து உயிர்த்துடிப்புடன் பொங்கிப் பீறிட்டுப் பிரவாகிக்கின் றன; படிப்போர் நெஞ்சங்களிலும் அவை வேகமாக ஊடுருவு கின்றன. உருவாக்கப்படும்—அல்லது 'செய்யப்படும்' கவிஞர்கள் 'கட்டுகின்ற' கவிதைகள் உயிரற்ற வெறும் ஜடப்பொருள் களாகவே காணப்படுகின்றன. மற்றவர்களின் நெஞ்சங்களை ஊடுருவி விறு நடை போட வைக்கும் ஆற்றலும் இப்படிப்பட்ட கவிதைகளுக்கு இருப்பதில்லை!

அதிலும் — ஒரு தேசம் அடிமைத்தளையை அறுத்தெறிந்து விடுதலைபெறத் துடித்தெழும் காலத்தில் — அந்தத் தேசத்தின் விடுதலைப் போராட்டம் வேகம் பெற்றிடுவதற்கேற்ற வீரமிக்க கவிதைகளை தரக்கூடிய வீறுமிக்க கவிஞர்களை அந்தந்தத் தேசங்களுக்கு தெய்வம் தந்திருக்கிறது!

இத்தாலிய நாட்டு விடுதலைக் கவிஞன் மாஜினியும், பாகிஸ் தான் நாட்டுக் கவிஞன் இக்பாலும், வங்கக் கவிஞன் தாகூரும், தமிழ் நாட்டுக் கவிஞன் சுப்பிரமணிய பாரதியும் இப்படித் தெய்வத்தால் அனுப்பப்பட்டவர்களே!

இவர்களைப் போலவே இன்றைய காலகட்டத்தில் விடுதலை பெறத் துடிக்கும் தமிழ் ஈழ நாட்டு மக்களுக்கு வேகம் சேர்க் கும் வீறுமிக்க கவிதைகளை தருவதற்காக தெய்வம் அனுப்பி வைத்துள்ள ஒப்பற்ற பொக்கிஷமே உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் என்பது எனது திர்க்கமான கருத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞரும் நானும் நெருக்கமான நண்பர்களாகி ஏழு ஆண்டுகள்தாம் ஆகின்றன; ஆனால் அவரது கவிதைகளுக்கு நான் அடிமையாகி இருபதாண்டுகளுக்கு மேலாகிவிட்டன. உணர்ச்சிப் பிழம்புகளாக உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து வெளிவரும் அவரது ஒவ்வொரு கவிதை வரியும் தமிழ் ஈழ நாட்டு விடுதலைப் படைஞர்களை ஊக்கி எழுப்பி நடத்தும் வீறு மிக்க போர்க் குரல்களாக முழங்குகின்றன! ஆம், கவிஞன் பிறக்கிறான் என்பதற்கு காசியின் கவிதைகள் சரியானதோர் எடுத்துக்காட்டு!

கவிஞர் காசி ஆனந்தனுக்குரிய தனிச்சிறப்பு — ஏனைய நாட்டு விடுதலைக் கவிஞர்களிடம் காணமுடியாத தனிப்பெரும் சிறப்பு ஆகும். அதாவது தன்னுடைய இலக்கியங்களுக்கு தானே இலக்கணமாகவும் அமைந்து வருகிறார் காசி ஆனந்தன்!

தமிழ் இனத்தின் விடுதலை பற்றி கவிதை மூலம் எழுச்சி ஏற்படுத்துவதுடன் மட்டும் தமது கடமை முடிந்துவிட்டதென அவர் இருந்துவிடவில்லை. "நாலு கவிதைகளை எழுதிக் கிழித்து விட்டால் இங்குள்ள தாழ்வு மறைந்து விடும்" என்று அவர் நம்புகிறவரல்லர். கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக தமிழ் ஈழவிடுதலை இயக்கத்துடன் தம்மையும் இணைத்துக் கொண்டு—இயக்கத்தின் ஒரு முன்னோடும் படைவீரராக பணியாற்றி வரும்செயல் வீரர் அவர்! அவரே ஒரு முறை குறிப்பிட்டது போல "விடுதலைத்தெய்வத்துக்கு மூதறிஞர் தந்தை செல்வா நேர்ந்துவிட்ட பலிக்கடவாக" தன்னை ஆக்கிக்கொண்டு —சிறைச்சாலை, சித்திரவதை, அடி உதை, அத்தனை துன்பங்களையும் தாங்கிக்கொண்டு — துடித்தெழுகின்ற தமிழ்ழ இளைஞர்களின் விடுதலை உணர்வின் ஈட்டி முனையாக விளங்கி வருகிறார் நமது கவிஞர்!

அத்தகைய கவிஞரது வீரவரலாறு — தமது இலட்சியப் பயணத்தில் அவர் சந்தித்த சோதனைகள் வேதனைகள் — அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த தியாகங்கள்—எந்தச் சந்தர்ப்பத்திலும் இயக்கத்துக்கும் இயக்கத் தலைமைக்கும் கட்டுப்பட்ட ஓர் உண்மைத் தொண்டனுக அவர் செயலாற்றி வரும் பக்குவம்—இவற்றையெல்லாம் தமிழீழம் காணத்துடிக்கும் இன்றைய இளைஞர்கள் சரியாகத்தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

இயக்கத்துக்கும் இயக்கத்தலைமைக்கும் கட்டுப்பட்டு செயலாற்றுகின்ற வீரர்களே இலட்சியப்போரில் இறுதி வெற்றிகாண முடியும்! எவ்வளவுதான் அசுரவேகத்துடன்—உணர்ச்சித் துடிப்புடன்—கவிஞர் தமது இருபதாண்டு கால அரசியல் வரலாற்றில் இயங்கியிருந்தாலும்—அவர் இந்தியத் தமிழ் நாட்டில் ஈடுபட்டிருந்த இயக்கங்களின் போதும் சரி—தமிழ் ஈழத்தில் நடைபெற்ற உரிமைப்போராட்டங்களின் போதும் சரி — தந்தை செல்வாவினதும், இயக்கத் தலைமையினதும் ஆணைக்குக் கட்டுப்பட்டே இயங்கிவந்திருப்பதை நம் தம்பிகள் சிந்தனைக்கெடுக்க வேண்டும்!

கவிஞரின் இருபதாண்டு கால இலட்சியப்போராட்டங்களையும் — அவர் கடந்து வந்த கரடுமுரடான பாதைகளையும்—நீந்தி வந்த நெருப்பாறுகளையும் — இந்நூலில் தம்பி சின்னத்துரை அழகாக தொகுத்துத் தந்திருக்கிறுர்!

காலத்தின் தேவையை அனுசரித்து வெளிவருகின்ற 'களம் ஆடிய கவிஞர் காசி ஆனந்தன்' எனும் இந்நூல் காசி ஆனந்தன் போன்ற ஆயிரக்கணக்கான உறுதிமிக்க இலட்சிய வீரர்களை—தியாகச்செம்மல்களை — உருவாக்குகின்ற உலைக் கூடமாக அமையும் என்கிற நம்பிக்கை எனக்கு மெத்தவுண்டு.

கோவை மகேசன்

194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12

சுதந்திரன் ஆசிரியர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணனின் ஆசியுரை!

தம்பி காசி ஆனந்தன் எங்கள் இயக்கமாம் தமிழரசுக் கட்சி உருவாக்கிய தியாக முத்துக்களில் குறிப்பிடத்தகுந்தவர். சிறந்த செயல் வீரர். சிறு வயதிலிருந்தே ஆழமான இலட்சியப் பிடிப்பும், அந்த இலட்சியத்தை சென்றடைய எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்கும் ஆண்மையும் அவரிடம் நிலைத்து வளர்ந்து வந்திருக்கின்றன.

தலைமைக்கும் இயக்கத்துக்கும் அமைந்து நடக்கின்ற கட்டுப்பாட்டுணர்வை வளர்த்துக் கொண்டிருப்பவர். அவர் அவரது கவிதா ஆற்றலை உலகம் நன்கறியும்.

அவரது அரசியல் வாழ்வை விளக்கும் இந் நூல், நம் இளைஞர்களுக்கு வழிகாட்டுவதாக அமையட்டும்!

அ. அமிர்தலிங்கம்.

மூளாய், சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களம் ஆடிய கவிஞர்
## காசி ஆனந்தன்

# தமிழர் படைக்கலன்!

அவர் ஒரு வெறும் கவிஞர் அல்ல — விடுதலை வீரர்.

தலைவனும் — தொண்டனும் தமிழர் தானையில் முன்னின்று போராடி — தமிழ் ஈழ விடுதலை வரலாற்றில் தனக்கென ஓர் தனி இடத்தைப் பெற்றுக்கொண்டவர் அவர்.

காசி ஆனந்தன் முறையாக வளர்ந்தவர். ஒரு விடுதலை வீரனைக் காலம்தான் படைக்கிறது என்பார்கள். ஆம் கவிஞர் அப்படித்தான் படைக்கப்பட்டார். அவர் வாழ்க்கை சாதாரணமானது அல்ல. ஒரு மாபெரும் விடுதலை வீரனின் தியாக காவியம் என்று அவர் வாழ்க்கையை வருணிப்போம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி தோன்றியது. கவிஞருக்கு அப்போது பத்து வயது இருக்கும். அந்தக் காலத்தில் கவிஞரின் அக்கா 'கல்கி' பத்திரிகை வாங்கிப் படிப்பாள். கவிஞரும் படிப்பார். 1948இல் காந்தி அடிகள் கொலையுண்டு மடிந்த போது 'கல்கி' பத்திரிகையில் மகாத்மா பற்றி வெளிவந்த உணர்ச்சி மிக்க கட்டுரைகளைக் கவிஞர் படித்தார். காந்தி அடிகளின் தியாக வாழ்க்கை கவிஞரின் வாழ்க்கையோடு அப்போதே இரண்டறக் கலந்துவிட்டது. அன்றே விடுதலை உணர்ச்சி அவர் நெஞ்சைத்தொட்டது. பத்து வயது நிரம்பிய அந்தப் பச்சிளம் பருவத்தில் கவிஞர் தன் முதலாவது பாட்டை எழுதினர்.

> ''காந்தித் தாத்தா நல்ல தாத்தா!
> கருணை உள்ள தாத்தா!
> தாழ்ந்தவர்க்கு வாழ்வு தந்தார்
> தாத்தா பெரிய தாத்தா!''

ஒருவனை விட இன்னெருவன் எந்த விதத்திலும் தாழ்ந்தவனுக இருக்கக் கூடாது என்ற இலட்சியம் காசி ஆனந்தன் நெஞ்சில் அவர் பத்து வயதுப் பிள்ளையாக இருக்கும் போதே ஆழப் பதிந்து விட்டது. இந்த உணர்வோடு கவிஞர் வளர்ந்த நேரத்தில்தான் — ஐந்து ஆண்டுகள் கழித்து — பதினைந்து வயது நிரம்பிய போது தமிழன் சிங்களவனுக்குத் தாழ்ந்தவனுக இருப்பதா? என்று தந்தை செல்வா தமிழரசுக் கட்சி மேடையில் முழங்கிய விடுதலைக் குரல் எங்கோ காற்றில் வந்து கவிஞரின் காதில் விழுந்தது. தமிழரசுக் கட்சி தோன்றிய ஐந்தாண்டு காலத்திலேயே கவிஞர் தமிழரசுத்தொண்டரில் ஒருவராகி விட்டார்!

*　　　*　　　*

1954ஆம் ஆண்டு மட்டக் களப்பில் தமிழ் மாணவர் மன்றத்தைக் கவிஞர் அமைத்தார். ஐந்து இளைஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு துவங்கிய இந்த மன்றம் பரந்து விரிந்து வளர்ந்து மட்டக்களப்பு அரசியல் வரலாற்றில் பத்து ஆண்டுகள் புரிந்த பணி மகத்தானது.

மட்டக்களப்புத் தமிழ் மாணவர் மன்றம் புயல் வேகத்தில் இயங்கியது. தமிழ் மாணவர்கள் பலர்பொலி சாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். மாண வர் சிலர் நீதி மன்றம் சென்றுர்கள். ராஜேந்திரன் என்ற தமிழ் மாணவர் மன்ற இளைஞன் சிங்கள இன வெறியன் ஒருவனின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகிமாண்டான். வரலாறு இந்நிகழ்ச்சிகளை ஒருபோதும் மறப்பதற்கில்லை.

* * *

1955 ஆம் ஆண்டில் ஒரு நிகழ்ச்சி. அப்போது கவிஞர் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் மாணவராக இருந் தார். மெதடிஸ்ற் மிசன் தலைவராக அன்றிருந்த மேதர் பாதிரியார் பத்திரிகைக்கு விடுத்த அறிக்கை ஒன்று அந் நாளில் மாணவரிடையே பெரும்பரப்பரப்பை ஏற்படுத் தியிருந்தது. 'தமிழ் மாணவர்கள் அனைவரும் சிங்களம் படிக்கவேண்டும்'' என்பதுதான் அந்த அறிக்கை. கவிஞ ரின் தமிழ் நெஞ்சை இச் செய்தி பெரிதும் காயப்படுத்தி யது. எப்படியாவது இதற்கு எதிர்ப்புத்தெரிவிக்கவேண் டும் என்று உரிய காலத்தை எதிர்பார்த்திருந்தார் கவி ஞர்.

காலம் வந்தது. அதே ஆண்டில் மட்டக்களப்புக்கு மெதடிஸ்ற் மிசன் கல்லூரிகளைப் பார்வையிடுவதற் காக மேதர் பாதிரியார் புறப்பட்டார். செய்தி அறிந்த கவிஞர் மாணவர் சிலரைத் தன்னுடன் அழைத்துக் கொண்டார். அவர்களைப் பார்த்துக் கூறினார்:- "தோழர் களே! மெதடிஸ்ற் மிசன் ஒரு புனிதமான சமய நிறு வனம். அநீதியையும் பாவங்களையும் எதிர்த்த இயேசு பிரானின் வழியைப் பின்பற்றும் அமைப்பு. இந்த அமைப்பின் இலங்கைக் கிளைத் தலைவர் தமிழ் மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சிங்களத்தைக் கற்கவேண்டும் என்றுகூறுவதால் தமிழினத்தை அழிக்கும் பெரும்பாவம் ஒன்றைச்செய்கிறார். அவருடைய சிங்களவெறி உணர்ச்சிக்கு எதிராக நாம் அவருக்குக் கறுப்புக்கொடி காட்டவேண்டும்!''

கவிஞரின் முழக்கம் சுருக்கமாக முடிந்தது. கவிஞரும் தோழர்களும் மட்டக்களப்பு புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார்கள். காலை வேளை. ஓங்காரக் கூச்சலோடு கொழும்பு புகைவண்டி பிளாட் பாரத்தில் வந்து நின்றது. புகைவண்டியில் இருந்து இறங்கிய மேதர் பாதிரியாரின் கண்கள் எதிரே கறுப்புக் கொடிகள் பறந்தன, "தமிழ் மாணவனைச் சிங்களம் படிக்கச் சொன்ன மேதர் பாதிரியாரே! உங்கள் கொள்கையைத் தயவு செய்து மாற்றுங்கள்!'' என்று கவிஞர் குரலெழுப்பினார். ஏனைய மாணவர்களும் முழக்கமிட்டார்கள். மேதர் பாதிரியார் மெதுவாக நழுவினார்.

மட்டக்களப்பு மெதடிஸ்ற் மிசன் மத்திய கல்லூரியில் ஒரு பெரிய விசாரணை நடந்தது. கல்லூரி மண்டபத்தில்—மேடையில்—மாணவர்கள் முன்னிலையில் கவிஞருக்கும் ஏனைய மாணவர்களுக்கும் பகிரங்க பிரம்படித் தண்டனை வழங்கினார் கல்லூரி அதிபர் சோமநாதர். கவிஞரின் அரசியல் போராட்டங்களில் அவருக்குக் கிடைத்த முதல் தண்டனை மேதர் பாதிரியாருக்குக் கறுப்புக்கொடி காட்டியதற்காக அவர் வாங்கிய பத்துப் பிரம்படிகள் தான்!

* * *

1956ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் நாள் பாராளுமன்றத்தில் தனிச் சிங்களச் சட்டம் நிறைவேறிய நாள். தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் இருந்தார்கள். அறவழியில் போராடிய அந்த வீரர்களைச் சிங்கள வெறியர்கள் அரக்கத்தனமாகத் தாக்கித் துன்புறுத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். தமிழரசுத் தலைவர்களான வன்னிய சிங்கம் அமிர்த லிங்கம் முதலானோர் மிருகத்தனமாகத் துன்புறுத்தப் பட்டார்கள். அன்று மட்டக்களப்பிலும் சத்தியாக்கிர கத்துக்கான ஒழுங்குகளைத் தமிழரசுக்கட்சி செய்திருந் தது. மட்டக்களப்பு முற்ற வெளியில் தொண்டர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

கவிஞர் தமிழ் மாணவர் மன்ற இளைஞர்களுடன் புறப்பட்டார். மட்டக்களப்பு நகரில், பிரதானமான ஏழு பாடசாலைகளின் கதவுகளை இழுத்து மூடினார் கவிஞர். ஆம், மட்டக்களப்பின் அரசியல் வரலாற்றில் முதன் முதல் நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்பு இதுதான.

*　　*　　*

1956ஆம் ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருமலை யாத்திரை நடைபெற்றது. கிழக்கிலங் கையின் தென்கோடியாம் திருக்கோயிலில் இருந்து அறப்போர் அணித்தலைவர் அரியநாயகம் தலைமையில் விடுதலை வீரர் யாத்திரை திருமலை நோக்கிப் புறப்பட் டது. கவிஞர் காசி ஆனந்தன் இந்த யாத்திரையில் கலந்து கொண்டார்.

*　　*　　*

1957ஆம் ஆண்டு வாகனங்களின் இலக்கத் தகடு களில் சிங்கள 'சிறீ'யை அரசாங்கம் திணித்தது. தமிழர சுக் கட்சித் தலைவர்கள் நேரடி நடவடிக்கை பற்றி ஆலோசிப்பதற்காகக் கூடினார்கள். சிங்கள 'சிறீ'யை எதிர்த்து சட்டமறுப்பு இயக்கம் நடத்துவதென்று தீர் மானிக்கப்பட்டது. தமிழ் ஈழத்தின் நாலு திசைகளிலும் சட்டமறுப்பு இயக்கத்தைத் தலைவர்கள் வேகமாக முடுக்கிவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் தன் கடமையை நிறைவேற்றப் புறப்பட்டார். மட்டக்களப்பு பஸ் நிலையத்தில்—சிங்கள 'சிறீ' பஸ் ஒன்றின் இலக்கத் தகட்டில் தாரைப் பூசி அரசின் சட்டத்தை மீறினார் கவிஞர். இச் சட்ட மறுப்பில் கவிஞருக்குத் துணையாக வில்லின் செல்வர் மாஸ்டர் சிவலிங்கம் உட்பட இன்னும் சில இளைஞர்களும் பொலிசாரால் உடன் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். கவிஞரை அன்றுதான் பொலிசார் முதல் தடவையாகக் கைது செய்தார்கள். அப்போது கவிஞருக்கு வயது பத்தொன்பது. பொலிஸ் நிலையத்தில் கவிஞர் கவிதை வடிவில் தனது வாக்குமூலத்தைக் கொடுத்தார்:—

"இந்நாட்டுச் சட்டம்
என் தமிழை அழிக்குமெனில்
என்னுடல் அச்சட்டத்தை
எதிர்த்துத் தூள் தூளாக்கும்!"

கவிஞர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஆனாலும் அவர்மீது வழக்கு தாக்கலாயிற்று.

* * *

1958ஆம் ஆண்டின் இலங்கை வரலாறு இரத்தம் தோய்ந்த அத்தியாயங்களைக் கொண்டது.

கொழும்பில் தமிழரின் கடைகளில் உள்ள தமிழ்ப் பெயர்ப் பலகைகளை சிங்கள இனவெறியர்கள் தார்பூசி அழித்தும்—உடைத்து நொருக்கியும் வெறிக்கூத்தாடினார்கள். இந்த அநீதியை அரசு கண்களை இறுக மூடியபடி பார்த்துக்கொண்டிருந்தது.

மட்டக்களப்புத் தமிழரசுக்கட்சிக் கிளை அரசின் அலட்சியப் போக்கைக் கண்டிக்கும் வகையில் மட்டக்களப்பில் அரச அலுவலகங்களில் உள்ள பெயர்ப்பலகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் சிங்களத்தைத் தார்பூசி அழிப்பதென்று முடிவு செய்தது. மட்டக்களப்பில் உள்ள தனிப்பட்ட சிங்கள மக்களின் கடைகளையோ—பெயர்ப் பலகைகளையோ தமிழரசுத் தொண்டர்கள் தொடவில்லை. அவர்கள் மிகவும் கண்ணியமாக நடந்துகொண்டார்கள். அரசுக்கு எதிராகவே தங்கள் போராட்டம் என்பது அவர்களுக்கு தெளிவாகத் தெரிந்திருந்தது.

மட்டக்களப்பிலுள்ள எல்லா அரச அலுவலகங்களி லும் தொண்டர்கள் பெயர்ப் பலகைகளில் இருந்த சிங்களத்தை அழித்து விட்டார்கள். கவிஞருக்கு ஏனோ மனத்திருப்தி இல்லை. ஒரே ஒரு அரச அலுவலகத்தின் பெயர்ப்பலகையில்மட்டும் சிங்களம் பளிச்சென்று காட்சி அளித்துக்கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணம். அந்த அலுவலகத்தை நெருங்க ஒருவரும் முன்வரவில்லை.

அதுதான் மட்டக்களப்பு பொலிஸ் நிலையம். 'பொலிஸ் கந்தோறுவ' என்று பெயர்ப் பலகையில் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது.

தார் டப்பாவைத் தூக்கிக்கொண்டு காசி ஆனந் தன் வேங்கைபோல் பொலிஸ் நிலையம் நோக்கித் தன்னந்தனியாக நடந்தார். அவருக்குத் துணையாக யாரும் வரவில்லை. 'பொலிஸ் கந்தோறுவ' என்ற சிங்கள எழுத்துக்களைத் தார்பூசி அழித்தார் கவிஞர்.

பொலிஸ் நிலையத்திலேயே போராட்டம் நடத் தினால் பொலிசார் விடுவார்களா என்ன? மிருகத்தன மாக அவரைப் பொலிசார் தாக்கினார்கள். அப்புஹாமி என்ற சிங்கள பொலிஸ் சார்ஜன்ட் கவிஞரைச் சுவ ரோடு சாத்திவைத்து—அவர் மார்பில் தன் பலம் முழுவ தையும் பிரயோகித்து ஓங்கிக் குத்தினான். இந்த சார் ஜன்ட் பின்பு 1958 இனக்கலவரத்தின்போது—மட்டக் களப்பில் புகையிரதம் கவிழ்க்கப்பட்ட நேரத்தில்—அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைவண்டியில் பயணம் செய்தவன் உடல் கிழிந்து இரத்த வெள்ளத்தில் பிணமாய் வீழ்ந்தான்.

'பொலிஸ் கந்தோறுவ' என்னும் சிங்கள எழுத்தை அழித்த குற்றத்துக்காகப் பொலிசாரால் பலமாகத் தாக்கப்பட்ட கவிஞர் பிணையில் உடன் விடுதலை செய்யப்பட்டாலும், தாக்குதலின் விளைவாக—வீடு சேர்ந்த இரு தினங்களில் இரத்த வாந்தியும் நோயுமாக அழுந்தி உடல் இளைத்தார். இந்தப் பொலிஸ் தாக்குதலில் அவர் பெற்ற உட்காயத்தின் விளைவாகவே பின்பு காச நோய்க்கும் ஆளானார்.

பொலிஸ் தாக்குதலின் பின் கவிஞர் நெஞ்சில் பொங்கி எழுந்த கவிதை ஒன்று அப்போது பத்திரிகைகளில் வெளியாகியது:—

'துடிப்புள்ள தமிழ் வீரர் தோள் வீரம் அறியீர்!
துணிவறியீர்! துள்ளும் வெறியரே கேளீர்!
முடித்தமிழ் மாமறவர் குலத்தில் முளைத்தோம்!
மூச்சுள்ள தமிழர் யாம்! பகை அஞ்ச மாட்டோம்!
தடிக் கம்புகொண்டோ எனை அடிக்கின்றீர்?
தமிழ் வீரம் அளக்கும் அளவுகோல் தடியோ?
இடிக்காதீர் காவலரே! இடித்தாலும் என்றன்
எலும்போடு தசைமோதித் தமிழ் என்றே கூறும்!'

* * *

1958இல் மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலு திசைகளிலும் கவிஞர் காற்ருய்ப் பறந்து விடுதலை இயக்கத்தில் தீவிர பணி ஆற்றினார். ஓர் இரவு கூட்டங்களில் கலந்து விட்டுத் திரும்பிய கவிஞர் காசி ஆனந்தனும் அறப்போர் முன்னணித்தலைவர் அரியநாயகமும் இயக்கத் தோழர்களான பணிமணி, பத்மநாதன் ஆகியோரும் செங்கலடியில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாணிக்கவாசகரின் இல்லத்தில் தங்கிச் சிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒய்வு எடுத்துக்கொண்டிருந்தார்கள். தெருவோரமாக இருந்த அந்த வீட்டின் முன்மண்டபத்தில் உட்கார்ந்து, மாணிக்கவாசகர்—மாணிக்கவாசகரின் துணைவியார் ஆகியோருடன் அவர்கள் உரையாடிக்கொண்டிருந்தார்கள். இரவு ஒன்பது மணி இருக்கும்... எதிர்பாராத விதத்தில் சிங்கள வெறியன் ஒருவன் வீசிய டைனமைட் குண்டு கவிஞர் இருந்த மண்டபத்துக்குப் பக்கத்து அறையில் பயங்கர அதிர்ச்சியோடு வெடித்தது. குண்டின் இலக்கு சற்றுத் தப்பி விட்டதால், கவிஞரும் ஏனைய தலைவர்களும் இயக்கத் தோழர்களும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்தார்கள்.

* * *

1958ஆம் ஆண்டு இனக்கலவரம் வெடித்தது. சிங்கள இன வெறியர்கள் விலங்குகளைப்போல் நடந்து கொண்டார்கள். பாணந்துறையில் ஒரு தமிழ் அர்ச்சகர் உயிரோடு நெருப்புமூட்டி எரிக்கப்பட்டார். பல தமிழ் உயிர்கள் பலியாகின. தமிழ்ப் பெண்களின் கற்பு கத்தி முனையில் பறிக்கப்பட்டது. தமிழர் உடைமைகளை சிங்கள வெறியர் கொள்ளையடித்துக் கூத்தாடினார்கள்.

சிங்கள இனவெறி கட்டவிழ்த்து விடப்பட்ட இந்த நேரத்தில் சிங்கள இனவெறித் தலைவர்கள் யாரும் கைதாகவில்லை. பதிலாக—தமிழர் தலைவர்களையே சிங்கள அரசு கைதுசெய்து தடுப்புக்காவலில் வைத்தது. மட்டக்களப்பில்—அமிர்தகளியில் கவிஞர் காசி ஆனந்தன் வீட்டுக்காவல் கைதியாக வைக்கப்பட்டார். அவருடைய வீட்டை விட்டு அவர் வெளியே வரக் கூடாது என்று அரசு அவசரகாலச் சட்டத்தின் கீழ உத்தரவு பிறப்பித்திருந்தது. பொலிஸ் காவலில்—தன் வீட்டில—கவிஞர் நான்கு மாதங்கள் தடுப்புக் காவல் கைதியாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காலத்தில் திடீர் திடீரென்று இரவில் கவிஞ ரின் வீட்டுக்குள் நுழையும் இராணுவத்தினரும் பொலி சாரும் அவருக்குச் செய்த துன்பங்கள் கொஞ்சநஞ்ச மல்ல.

வீட்டுக்காவல் கைதியாக இருந்த காலத்தில்தான் கவிஞரின் 'சிறீ' அழிப்பு வழக்கும் நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தது. கவிஞரையும் கவிஞரோடு 'சிறீ' அழிப்பில் கலந்து கொண்ட ஏனைய இளைஞர்களையும் நீதிபதி குற்றவாளிகளாகக் கண்டு நீதிமன்றம் கலையும் வரை வழங்கப்படும் சிறைத் தண்டனையை அவர்களுக்கு வழங்கினார்.

* * *

1959 ஆம் ஆண்டு பிறந்தது. கவிஞர் படித்த மட் டக்களப்பு மத்திய கல்லூரியின் விளையாட்டு விழாவுக் கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. கவிஞர் இக் கல்லூரியை விட்டு அப்போதுதான் வெளியே வந்திருந் தார். இதே கல்லூரியின் இன்னொரு பழையமாணவரான நிந்தவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாப் மூஸ்த பாவை இவ்விழாவின் பிரதம விருந்தினராகக் கல்லூரி நிர்வாகம் அழைத்திருந்தது.

ஜனாப் முஸ்தபா தமிழரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர். பின்பு சுயநலத்துக்காகத் தன் இலட்சியத்தை விட்டு விலகி அரசாங்கக் கட்சியான எம். ஈ. பி. கட்சியில் சேர்ந்திருந் தார்.

1956ஆம் ஆண்டு திருமலை மாநாட்டில் தலைமை தாங்கி, தனிச் சிங்களத் திணிப்பை எதிர்த்துத் தீவிர மாக முழங்கியவர் முஸ்தபா. பின்பு அதே தனிச் சிங் களத்தைத் திணித்த அரசாங்கக் கட்சியில் சேர்ந்து ஓர் அரை அமைச்சராகவும் ஆகிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஏகாதிபத்தியத்தின் அரை அமைச்சராகத் தான் மட்டக்களப்பு மத்திய கல்லூரி விளையாட்டு விழாவுக்கு தலைமை தாங்கவும் பரிசளிக்கவும் வருகை தர இருந்தார் முஸ்தபா.

கவிஞரால் இதையும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருக்கமுடியவில்லை. கவிஞரின் நெஞ்சம் கனலாய்க் கொதித்தது. விழா நாளும் வந்தது.

மட்டக்களப்பு மைதானத்தில் விளையாட்டு விழா நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை — ஜனுப் முஸ்தபா தலைமைப்பேச்சை நிகழ்த்த ஆரம்பித்ததும்—திடீரென்று கூட்டத்திலிருந்து பாய்ந்து கறுப்புக்கொடியைக் காட்டி, "முஸ்தபா திரும்பிப்போ'! என்று உணர்ச்சிக் குரலில் முழங்கினர் கவிஞர். கவிஞரோடு வேறு சில பிரமுகர்களும் இளைஞர்களும். கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டார்கள். பொலிசார் கொஞ்சமும் தாமதிக்காமல் கவிஞரைக் கைது செய்தார்கள். மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்ட கவிஞர் பின்பு பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

* * *

1959ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கவிஞர் காசி ஆனந்தன் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு சென்றுர். காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியிலும் சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும் கவிஞர் பயின்றுர். கல்லூரி வாழ்வில டாக்டர் மு. வரதராசன், பேராசிரியர் ந. சஞ்சீவி, தமிழறிஞர் அ. மு. பரமசிவானந்தம் ஆகியோரிடம் தமிழின் அருமை பெருமைகளை அறிந்தார். கல்லூரிக்கு வெளியே — பாவேந்தர் பாரதிதாசனின் மாணவனுகவும் கவிஞர் இலக்கியம் பயின்றுர்.

தமிழ் நாட்டில் கவிஞர் பட்டப்படிப்பில் ஈடுபட்டிருந்த காலத்தில், இலங்கைத் தமிழர் இழிநிலையை தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் எடுத்துக் கூறும் பெரும் பணியை மேற்கொண்டார். இக் காலத்தில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, சி. பா. ஆதித்தனார் ஈரோடு சின்னசாமி ஆகியோர் கவிஞரின் உணர்ச்சியை மதித்து அவரைப்பெரிதும் பாராட்டினார்கள். கவிஞரின் எழுச்சிமிக்க தமிழ்க் கவிதைகளைப்படித்துவிட்டு 'உணர்ச் சிக் கவிஞர்' என்ற பட்டத்தை பாவேந்தர் பாரதிதாசன் கவிஞருக்கு வழங்கினார். தினத்தந்தி, தனியரசுபோன்ற தமிழ் நாட்டு நாளேடுகள் காசி ஆனந்தனைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் 'உணர்ச்சிக் கவிஞர்' என்றே அவரை அழைத்தன.

தமிழர் தலைவர் ஆதித்தனார் தலைமையில் இயங்கிய நாம் தமிழர் இயக்கத்தில் கவிஞர் உறுப்பினராகி, தமிழ் நாட்டிலும் தீவிர விடுதலைப் பணியில் இறங்கினார். உணர்ச்சிக் கவிஞரின் 'உயிர் தமிழுக்கு' என்னும் கவிதை நூலின் முதல் பதிப்பு தமிழகத்தில் அப்போது வெளியாகியது. இக் கவிதைத் தொகுப்பின் பத்தாயி ரத்திற்கும் அதிகமான பிரதிகள் தமிழ் நாட்டில் மிகக் குறுகிய காலத்தில் விற்பனையாயின. கவிஞர் தமிழ் நாட்டில் ஒரு சக்தி ஆனார்.

தி. மு. க. தலைவர்களில் ஒருவரான கலைஞர் கருணா நிதி நாம் தமிழர் இயக்கத்தில் இருந்த கவிஞரை—அவர் மாற்றுக் கட்சிக்காரர் என்பதையும் மறந்து "காசி ஆனந்தன் தமிழர் எழுச்சிக்குக் கிடைத்த தக்கதோர் படைக்கலன்!" என்று பாராட்டினார். "இந்திய சுதந்தி ரத்தை நிறுவ வந்த பாரதிபோல் — தமிழினத்தின் விடு தலையை நிலை நாட்டவந்த காசி ஆனந்தன் இரண்டாவது பாரதி ஆவார்" என்று கவிஞரைப் புகழ்ந்தார் சி. பா. ஆதித்தனார்.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960ஆம் ஆண்டு கவிஞர் காச நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். 'எக்ஸ்றே' படம் கவிஞரின் மார்பில் இருந்த காயத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டியது. முன்பு பொலிசார் தாக்கியதன் விளைவாக இந்நோய் ஏற்பட்டிருக்கவேண்டும் என்றே மருத்துவர்கள் கருத்துத்தெரிவித்தார்கள். சென்னையில் மருத்துவம் பெற்றுக்கொண்டே கவிஞர் தன் மேற்படிப்பைத் தொடர்ந்தார்.

* * *

1961 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழரசுக் கட்சி மறியல் போராட்டத்தை மிகப்பெரிய அளவில் நடத்தியது. யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ் ஈழத்தின் பெரு நகர்களில் — கச்சேரிகளுக்கு முன்னால் சத்தியாக்கிரகிகள் உட்கார்ந்து மறியல் போராட்டம் செய்தார்கள்.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பு சத்தியாக்கிரகம் செய்த தலைவர்களான டாக்டர் நாகநாதன், தளபதி அமிர்தலிங்கம், உடுப்பிட்டி சிவசிதம்பரம் ஆகியோர் பொலிசாரால் பலமாகத் தாக்கப்பட்டார்கள்.

சென்னையில் படித்துக்கொண்டிருந்த கவிஞரை ஈழத்தில் இருந்து வந்த மறியல் போராட்டம் பற்றிய செய்திகள் பெரிதும் துன்புறுத்தின. தமிழ் நாட்டில் இருந்து தன்னால் இந்நிலையில் என்ன செய்யமுடியும் என்று அவர் சிந்தித்தார். கவிஞர் நெஞ்சில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது.

அறிஞர் அண்ணா அவர்களை நேரில் சென்று கண்டார் கவிஞர். இலங்கைத் தமிழர் படும் இன்னல்களை — மறியல் போராட்டத்தில் பொலிசாரிடமும் இராணுவத்தினரிடமும் அவர்கள் படும் துன்பங்களை—அழுதழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவிடம் அவர் எடுத்துக் கூறினார். அண்ணாவின் கண்களிலும் நீர் பனித்தது. இச் சந்திப்பின் விளைவுதான் இலங்கைத் தமிழர் போராட்டத்துக்கு ஆதரவாக 1961ஆம் ஆண்டு சென்னை மெரினா கடற்கரையில் தி. மு. க. நடத்திய மாபெரும் எழுச்சிக்கூட்டம்! அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சுமார் ஐந்து இலட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத் தமிழ் வேங்கை!

1961ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற மறியல் போராட்டம் நாளுக்கு நாள் வேகம் பெற்று வந்தது. மெரினு கடற்கரைக் கூட்டத்தை முடித்துக் கொண்டு கவிஞர் காசி ஆனந்தன் மறியல்போராட்டத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளும் நோக்கோடு இலங்கை திரும்பினுர். மட்டக்களப்பில் கவிஞர் அமைத்த தமிழ் மாணவர் மன்றம் மறியல்போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. கச்சேரி தவிர்ந்த ஏனைய அரசாங்க அலுவலகங்களுக்கு முன்பு மறியல்போராட்டத்தை மாணவர் மன்ற இளைஞர்களே நடத்திக்கொண்டிருந்தார்கள்.

மறியல் போராட்டம் நடைபெற்ற அதே வேளை—மாணவர் ராஜேந்திரன் சமாதியில்—கவிஞர் தலைமையில் ஐம்பது தமிழ் மாணவர் மன்ற இளைஞர்கள் தங்கள் கைகளைக் கத்தியால் கிழித்து—தமிழ் இளைஞர் தம் போராட்ட உறுதிப்பாட்டைக் காட்டும் ஆணை மடல் ஒன்றை வரைந்து—இரத்தத்தால் ஒப்பமிட்டு பிரதமருக்கு அனுப்பி வைத்தார்கள்.

* * *

1961ஆம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின்போது நடைபெற்ற இன்னெரு உணர்ச்சிமிக்க சம்பவத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

ஒரு நாள் கவிஞர் தலைமையில் மட்டக்களப்புத் தமிழ் மாணவர் மன்ற இளைஞர்கள் தீவிரமான முடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றை எடுத்தார்கள். மறியல் போராட்டத்துக்கும் மேலே ஏதாவது ஒரு சட்ட மறுப்பில் ஈடுபடவேண்டும் என்பதுதான் அந்த முடிவு.

மறுநாள் காலை மட்டக்களப்பு வாவி கடலோடு கலக்கும் முகத்துவாரம் என்ற இடத்துக்கு கவிஞரும் ஐம்பது இளைஞர்களும் சென்றார்கள். இளைஞர்களோடு மட்டக்களப்பு முன்னாள் மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம் அவர்களும் சேர்ந்துகொண்டார். முகத்துவாரத்தில் இருந்து மட்டக்களப்பு நகரை நோக்கிப்புறப்படும் பஸ்சில் எல்லோரும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள். பஸ் கண்டக்டரைப் பார்த்துக் கவிஞர் சொன்னார் — 'நாங்கள் சட்டமறுப்பில் ஈடுபடுகிறோம். உங்களிடம் டிக்கட் வாங்கமாட்டோம். தனிப்பட்ட முறையில் உங்களுக்குத் தொல்லை தருவதற்கு மன்னியுங்கள். உங்கள் கடமை எதுவோ அதைச்செய்யுங்கள். எங்களைப் பொலிசாரிடம் ஒப்படையுங்கள்!'

பஸ் புறப்பட்டது. மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சட்டமறுப்புப்பயணிகள் ஒப்படைக்கப்பட்டார்கள். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட பின்பு அவர்கள் நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். எந்த விசாரணையும் நடைபெறாமலே அன்று மாலை பொலிசார் அவர்களை விடுதலை செய்தார்கள்.

அன்றிரவுதான் அரசாங்கம் மூன்று மாதங்களாக நடைபெற்ற மறியல் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த பயங்கர இரவு. அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. தமிழர் தலைவர்கள் கைதானார்கள். தமிழ் ஈழத்தின் விடுதலை வரலாற்றில் விறுவிறுப்பான ஒரு கட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றது.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1962ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா மீனம் பாக்கம் விமானநிலையத்தில் தங்கி வெளிநாடு செல்வதாகச் செய்திகள் வெளியாகின. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த கவிஞர் இச்சந்தர்ப்பத்தை இலங்கைத் தமிழர் போராட்டத்துக்கு வலுவூட்டும் வகையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நினைத்தார். திட்டம் ஒரு நொடியில் உருவாகிற்று.

இலங்கை மாணவர்கள் கவிஞர் தலைமையில் மீனம் பாக்கம் விமான நிலையத்தை நோக்கிப்புறப்பட்டார்கள். முன்கூட்டியே செய்தி தெரிந்த இந்திய அரசாங்கம் விமான நிலையத்தைச் சுற்றிப் பலத்த பொலிஸ் காவல் போட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய நூற்றுக்கணக்கான பொலிசார் காவலில் ஈடுபட்டிருந்தார்கள். விமான நிலைய நுழைவாசலிலேயே மாணவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டார்கள்.

பிரதமர் சிறிமாவோ அம்மையாரை ஏற்றி வந்த விமானம் பேரிரைச்சலோடு கீழே இறங்குவதற்கும் இலங்கை மாணவர்கள் மறைத்து வைத்திருந்த கறுப்புக் கொடிகளை உயரத் தூக்கி "இலங்கைத் தமிழரை நசுக்கும் இதயமற்ற பிரதமரே இதோ உங்களுக்கு எங்கள் காணிக்கை" என்று கோஷமிடுவதற்கும் சரியாக இருந்தது. எழுச்சிக் குரல்கள் வானைக் கிழித்தன. ஆர்ப்பாட்ட மாணவர்களைப் பொலிசார் இங்குமங்குமாக அடித்துத் தாக்கினார்கள். கவிஞரோ மாணவர்களிடையே நிமிர்ந்து நின்று முழக்கமிட்டார்.

தமிழ் நாட்டில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய இக்கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தின் பின்பு—சென்னை தேனாம்பேட்டை பொலிஸ் நிலையம் கவிஞரை அழைத்து விசாரணை நடத்தியது. கவிஞர் இச்சந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு நாடு கடத்தப்படும் நிலையில் இருந்தார். அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தால் கவிஞர் காசி ஆனந்தன் பட்டப்படிப்பை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

* * *

1963ஆம் ஆண்டின் துவக்கத்தில் சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில் கவிஞர் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றிக்கொண்டிருந்தார். இந்திய சுதந்திரப் போரில் பல முறை சிறை சென்றவரும்—பின்பு சோசலிஸ்டு கட்சியில் டாக்டர் லோகியாவின் தோழராக விளங்கியவரும்—அப்போது நாம் தமிழர் இயக்கத் தளபதியாக இருந்தவரும்—இன்று முடக்குறிச்சி தி. மு. க. எம். எல். ஏ. ஆகஇருப்பவருமான ஈரோடு சின்னசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கவிஞர் காசி ஆனந்தன் இலங்கைத் தமிழர்படும் இன்னல்களை தமிழர்களுக்கு எடுத்துக்கூறிக்கொண்டிருந்தார்.

ஆம். தமிழ் நாட்டில் வறுமை, நோய், துன்பம் இவற்றிடையே தன் பட்டப் படிப்பைத்தொடர்ந்து கொண்டிருந்த கவிஞர் உணர்ச்சிகரமாக முழங்கி நின்றார்.

தன்நிலை மறந்து பேசிக்கொண்டிருந்தார் கவிஞர்.

அப்போது—காயப்பட்ட பயங்கரமான காசநோய் மார்பில் இருந்து கவிஞரின் வாயால் இரத்தம் குபீர் என்று கொட்டிற்று. மேடையில் இருந்து கவிஞர் விழப் பார்த்தார். ஆனாலும் தொடர்ந்து பேசி ஒருவாறு தன் சொற்பொழிவை முடித்துக்கொண்டார் அவர்.

கவிஞர் திரும்பவும் நோய்வாய்ப் பட்டதை அறிந்த நாம் தமிழர் இயக்கத் தலைவர் சி. பா. ஆதித்தனார் கவிஞரின் நிலை அறிந்து மனம் வருந்தினார். சுதந்திரா கட்சித் தலைவர்களில் ஒருவரும் பிரபல மார்பு நோய் வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யருமான டாக்டர் சந்தோஷம் அவர்களிடம் கவிஞரை உடனடியாக அனுப்பி வைத்தார் ஆதித்தஞர்.

டாக்டர் சந்தோஷத்தின் பரிசோதனைகளில் கவிஞர் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பது தெரிய வந்தது. கவிஞர் அன்றே சென்னை பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். கவிஞரின் வாயில் இருந்து தொடர்ந்து பதினைந்து தினங்கள் இரத்தம் கட்டி கட்டியாய்க்கொட்டிற்று. சென்னை மருத்துவ விடுதியில் நோய்ப் படுக்கையில் கிடந்தபடியே கவிஞர் உருக்கமான கவிதை ஒன்றைப் பாடினர்:-

"இறைவா! எனக்கின்னும்
பல்லாண்டுயிர் ஈந்தளிப்பாய்! —என்னை
மறையாதிங்கு வைத்துத்
தமிழுக்கு வாழ்வளிப்பாய்! கொடும்
சிறையால் தமிழ் மாந்தர்
படுந்துயர் அறியாயோ? — அட
இறைவா! எனக்குயிர்
தந்தால் சிறையுடையாதோ?

சென்னை மருத்துவ விடுதியில் ஒரு மாத காலம் மருத்துவம் பெற்ற பின்பு கவிஞர் ஓரளவு உடல் நலம்பெற்றவராய் வெளிவந்தார். வெளியே கவிஞருக்கு மகிழ்ச்சியான ஒரு செய்தி காத்திருந்தது. பட்டத்தேர்வு முடிவுகள் வெளியாகி — அதில் கவிஞர் இரண்டாந்தரத்தில் சித்தியடைந்திருந்தார். கவிஞர் காசி ஆனந்தன் பி. ஏ பட்டதாரி ஆனர்.

* * *

1963ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி சென்னையில் இலங்கைத் தூதரகத்தின் முன்ஞல் உண்ணுவிரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதென்று கவிஞர் முடிவுசெய்தார். இலங்கைத் தமிழர் பிரச்சினையை உலகின் கவனத்துக்குக்கொண்டு வருவதற்காக இந்த உண்ணாவிரதம் ஒழுங்கு செய்யப் பட்டது. "Why we go to fast'' ஏன் உண்ணாவிரதம் இருக்கிறோம்?' என்ற தலைப்புக்களிலான துண்டுப்பிரசுரங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் ஆறு தமிழ் இளைஞர்கள் குறிப்பிட்ட நாளில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்கள்.

உண்ணாவிரதம் நிகழ்வதற்கு முதல் நாளே கவிஞர் இந்திய சி. ஐ. டி பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அன்றிரவு கவிஞரும் மற்றைய இளைஞர்களும் கைது செய்யப்படலாம் என்று செய்திகள் பரவலாக அடிபட்டன. ஆனால் பொலிசாரோ வேறு விதமாகச் செயல்பட்டார்கள். இந்நிகழ்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதே அவர்கள் கவலையாக இருந்தது. உண்ணாவிரதிகளை கைது செய்யாமல் இலங்கைத் தூதரகத்தை வளைத்துப் பலத்த காவலை ஏற்படுத்துவதில் அவர்கள் கவனம் செலுத்தினார்கள். ஆயுதம் தாங்கிய பொலிசார் காவலில் ஈடுபட்டிருந்தார்கள்.

நிலைமையை உணர்ந்த கவிஞர் உண்ணாவிரதம் இருந்த கோலத்திலேயே மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். "இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் ஆயிரம் கொடுமைகளை எதிர்த்துஇந்த நாளில் ஆறு பேர் நாங்கள் உண்ணாவிரதம் இருக்கிறோம். புனிதமான இந்த உண்ணாவிரதத்தை நீங்கள்தான் முடித்துவைக்க வேண்டும். தங்கள் ஆசிகள் தேவை''என்று தனது கடிதத்தில் ராஜாஜியைக் கேட்டிருந்தார் கவிஞர். கவிஞரின் வேண்டுகோள் நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை கவிஞருக்கும் தோழர்களுக்கும்பழரசம் கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார் ராஜாஜி. இந்தியப்பத்திரிகைகள் உண்ணாவிரதம் பற்றிய செய்தியை மிகுந்த பரபரப்போடு வெளியிட்டன. ராஜாஜியின் இலங்கை அரசுக்கு எதிரான கண்டனமும் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

* * *

1964ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் கவிஞர் காசி ஆனந்தன் பட்டமளிப்பு விழாவை முடித்துக்கொண்டு இலங்கை திரும்பினார். வீடு சேர்ந்ததும் உடனடியாக மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார் கவிஞர். ஆம் காசநோய் இன்னும் அவர் உடலை விட்டு நீங்கவில்லை. காசநோயாளர் நிறைய சாப்பிடவேண்டும் என்பார்கள். கவிஞரோ காசநோயோடு தமிழகத்தில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டவர். தன்னுடைய நோயைவிடத் தமிழினத்தின் நோயைப் பெரிதாக நினைத்துப் பணிபுரிந்தவர் அவர். அதனால் முற்றாக நோய் அவரை விட்டு நீங்காமல் அவரோடு ஒட்டிக்கொண்டே இருந்தது. பத்து மாதங்கள் மட்டக்களப்பு மருத்துவ விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றார் கவிஞர்.

* * *

1965ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் வந்தது. வெளிநோயாளராய்—ஊசிகளைப் போட்டுக்கொண்டே—மாத்திரைகளை விழுங்கிக்கொண்டே கவிஞர் தமிழரசுக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரத்தில் இறங்கினார். தேர்தல் நிலைமை நாலா பக்கங்களிலும் சூடு பிடிக்க ஆரம்பித்தது. மட்டக்களப்பு முற்ற வெளியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் வைத்து பொலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார் கவிஞரைக் கைது செய்தார்கள். உடனடியாக அவர் விடுவிக்கப்பட்டார்.

உடுப்பிட்டி, மன்னார், பட்டிருப்பு, கல்குடா, மட்டக்களப்பு ஆகிய பல தொகுதிகளிலும் இரவு பகல் என்று பாராமல் கொள்கை முழக்கமிட்டார் கவிஞர். தன் உடலைப் பிடித்திருந்த பயங்கர நோயை அவர் உதாசீனம் செய்தார். விளைவு...? தேர்தல் முடிந்து தமிழரசு வேட்பாளர் பெரு வெற்றி ஈட்டிய பின்பு—ஒரு நாள் இரத்த வாந்தி எடுத்து—கவலைக்கிடமான நிலையில் மருத்துவ விடுதியில் திரும்பவும் அனுமதிக்கப்பட்டார் கவிஞர்.

கவிஞரின் வாழ்வில் அந்த நாட்கள் கண்ணீரும்செந் நீரும் கலந்த நாட்களே! ஒவ்வொரு நிமிடமும் கவிஞர் சாவுக்குப் பக்கத்தில் இருந்தார். அவரை மருத்துவம் செய்த டாக்டர்களே நம்பிக்கை இழந்திருந்தார்கள். ஆயிரத்து அறு நூறு ஊசிகள் கவிஞரின் உடலில் பாய்ச்சப்பட்டன. பத்தாயிரத்துக்கு அதிகமான மாத்திரைகளை அவர் உட்கொண்டார். ஒன்றரை ஆண்டுகள் மட்டக்களப்பு காசநோயாளர் விடுதியில் தங்கி மருத்துவம் பெற்றார் கவிஞர். இங்குதான் 'தமிழன் கனவு' காவியத்தை அவர் படைத்தார்.

* * *

1967 ஆம் ஆண்டு கவிஞர் உடல் நலம் பெற்று வெளியே வந்தார். குறிப்பிட்ட சில காலம் கவிஞர் உடலை அலட்டாமல் கவனித்துக்கொள்ளவேண்டும் என்று டாக்டர்கள் அறிவுரை கூறியிருந்தார்கள். கவிஞர் பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் பதவியை ஏற்றுஅமைதியான பணிபுரியும் நோக்கோடு கொழும்பு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1968 ஆம் ஆண்டு 'தமிழ்த்தாய் மன்றத்தை' கவிஞர் காசி ஆனந்தன் துவக்கினர். தமிழ் — தமிழ்ப்பண்பாடு— தமிழினம் என்ற சிந்தனை இளைஞர் மத்தியில் பரவ இம்மன்றம் அரும்பணி புரியலாயிற்று. இக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் இலங்கை வானொலியில் 'நாளைய சந்ததி' நிகழ்ச்சியை நடத்தும் வாய்ப்பும கவிஞருக்குக் கிட்டியது. தமிழர்க்கு ஊறு விளைவிக்கும் பண்பாட்டு சீர்கேடு—சாதிபேதம் முதலியவற்றை வானொலியில் வெளிப்படையாகச் சாடினர் கவிஞர்.

* * *

1969 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா அமரரானர். 'சுதந்திரன்' இதழில் கவிஞரின் 'அண்ணா காவியம்' ஆரம்பமாயிற்று. 'தமிழ்த்தாய் மன்றம்' மிகுந்தவேகத்தோடு இயங்கிக்கொண்டிருந்த காலம் அது. சி. ஐ. டி. பொலிசார் தமிழ்த்தாய் மன்றம் பற்றித் தீவிர புலன் விசாரணையை மேற்கொண்டிருந்தார்கள். கொழும்பு ஹம்டன் ஒழுங்கையில் இருந்த கவிஞரின் வாடகை வீட்டிற்கு சி. ஐ. டி. பொலிசார் நாள் தவருமல் வருவதும் போவதும் அந்நாளைய வழக்கம். கவிஞர் நடத்திய 'தமிழ்த்தாய் மன்றம்' ஒரு பண்பாட்டுக் கழகமே ஆயினும் அரசினர் பயந்து பயந்தே அதை நோக்கினர்கள்.

* * *

1970 ஆம் ஆண்டில் பொதுத்தேர்தல் வருவதற்கு முன்பு—கூட்டுறவுத் திணைக்களத்தில் மொழி பெயர்ப்பாளராகக் கடமை ஆற்றிய கவிஞரை 'அண்ணா காவியம்' எழுதிய குற்றத்துக்காக யு. என். பி. அரசு விசாரணை செய்தது. 'அண்ணா காவியத்தை' சுதந்திரனில் வெளியிடுவதன் மூலம் கவிஞர் தமிழரை அரசாங்கத்துக்கு எதிராகத் தூண்டி விடுகிருர் என்று யாரோ எழுதிய மொட்டைக் கடிதத்தை ... த்துக்கொண்டு விசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணையை அரசு நடத்தியது. விசாரணை முடிவில் கூட்டுறவுத் திணைக்களத்தின் ஆணையாளரால் கவிஞர் எச்சரிக்கப்பட்டார். ஆனால் சுதந்திரனில் 'அண்ணு காவியப்' தொடர்ந்து வெளிவந்துகொண்டே இருந்தது.

இக்காலத்தில்தான் படைஞர் பாசறையினர் கவிஞரின் 'தமிழா உன்னைத்தான்'! தொகுப்பு நூலை வெளியிட்டார்கள். கவிஞரின் சொற்பொழிவுகள் அடங்கிய தொகுப்பு நூலாய் இந்நூல் வெளி வந்தது. தமிழ் மக்களிடையே—குறிப்பாக தமிழ் இளைஞரிடையே இந்நூல் புதியதோர் எழுச்சியை உண்டாக்கிற்று.

* * *

1970இல் பொதுத் தேர்தல் நடைபெற்று—சிறிமாவோ அம்மையார் அரசு கட்டிலேறியதும் இலங்கை வானொலியில் நடைபெற்ற 'நாளைய சந்ததி' நிகழ்ச்சிப் பொறுப்பில் இருந்து கவிஞர் வெளியேற்றப்பட்டார். உணர்ச்சிக் கவிஞரின் தமிழ் முழக்கம் இலங்கை வானொலியில் ஒலிக்கக்கூடாது என்று அரசு உத்தரவு இட்டது. கவிஞரின் வானொலி நிகழ்ச்சிகள் நின்றன. ஆனாலும் தமிழ் ஈழத்தின் வானெல்லாம் அவர் தமிழ் ஒலிக்கத் தவறவில்லை.

* * *

1971ஆம் ஆண்டு 'லேக்ஹவுஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான 'தினகரன்' பத்திரிகையில் கவிஞர் 'செல்வா எங்கள் செல்வம்' என்ற தலைப்பில் மூதறிஞர் செல்வாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதத் தொடங்கினார். அரசாங்க உயர்மட்டத் தலைவர்களின் தலையீட்டால்—'தினகரன்' பத்திரிகையில் வெளியாகிய இத்தொடர் கட்டுரைக்கு 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனம் தடை விதித்தது. 'செல்வா எங்கள் செல்வம்' பாதியில் நிறுத்தப்பட்டது. கவிஞரின் எழுத்துக்கும் பேச்சுக்கும் சிங்கள ஏகாதிபத்தியம் கதிகலங்கி ஆடிய ஆட்டங்களில் இதுவும் ஒன்று.

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச் சுடர்!

1972ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி புதிய குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பிரகடனப் படுத்துவதென்று அரசியல் அமைப்பு நிர்ணய சபை முடிவு செய்தது. தமிழினத்தின் உரிமைகள் அனைத்தையும் குழிதோண்டிப் புதைக்கும் புதிய அரசியல் அமைப்பை முழுமூச்சோடு எதிர்ப்பதென்று கவிஞர் உறுதி பூண்டார்.

'குடியரசு தினமான மே 22இல் அரசாங்க ஊழியர் அனைவரும் புதிய குடியரசு அரசியல் அமைப்பின் மீது விசுவாசப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும்' என்று, அரசாங்கத்தின் சுற்றறிக்கை ஒன்று கூறியது. கவிஞர் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புதிய அரசியல் அமைப்பின் மீது விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்துத் தன் மொழி பெயர்ப்பாளர் பதவியை ராஜினாமாச் செய்வதென்று தீர்மானித்தார்.

கவிஞர் காசி ஆனந்தன் தொடர்ந்து பட்டதாரி மொழி பெயர்ப்பாளராய் இருந்திருந்தால் ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான மாத சம்பளத்தைத் தனது சேவைக் காலத்தில் அவர் பெற்றிருப்பார். ஆனால் அந்த ஆயிரம் ரூபா தமிழரின் மான உணர்வுக்கு முன் எம்மாத்திரம்!

1972 மே 12ஆம் திகதி கவிஞர் குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத்தில் விசுவாசப் பிரமாணம் செய்ய மறுத்து—தனது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்தார். அப்போது கவிஞர் பரீட்சைத் திணைக்களத்தில் பட்டதாரி மொழி பெயர்ப்பாளராய் இருந்தார். கவிஞரின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ராஜினாமாக் கடிதம் ஒவ்வொரு தமிழன் நெஞ்சையும் உருக்கும் ஓர் உணர்ச்சி இலக்கியமாகும். கடிதம் இதுதான்:—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்தசேவைகளின் அதிபர்,
பரீட்சை ஆணையாளர் ஊடாக,
கொழும்பு-2.

ஐயா,

கடந்த ஐந்து ஆண்டுகளாக ஓர் அரசாங்க ஊழியனாய் இருந்துவரும் நான், முதல் குடியரசு தினமான 22-5-1972இல் இலங்கை வாழ் தமிழ் இனத்தை முழு அடிமை இனமாக மாற்றும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் விசுவாசப் பிரமாணம் எடுக்கக் கூடாது என்ற திடமான முடிவுடன் எனது இந்த ராஜினமாக் கடிதத்தைத் தங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

இலங்கையில் வாழும் தமிழ் அரசாங்க ஊழியன் ஒவ்வொருவனும் புதிய குடியரசு தினத்தன்று விசுவாசப் பிரமாணம் எடுக்கும்போது "வேறு வழியில்லை" என்ற நிலையில்தான் அதனைச் செய்வானே தவிர மன விருப்போடு அக்காரியத்தைச்செய்யமாட்டான். பற்களைக் கடித்துக்கொண்டு நெற்றியைச் சுருக்கிக்கொண்டு தான் அவன் விசுவாசப் பிரமாணத்தைப் படிப்பான்.

குடியரசு நாளுக்கு முன்பு தமிழ் அரசாங்க ஊழியர்களிடையே ஒரு ரகசிய வாக்கெடுப்பை அரசாங்கம் நடாத்திப்பார்த்தால் 'புதிய குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்று விசுவாசப் பிரமாணம் செய்ய எமக்கு விருப்பமில்லை' என்ற கருத்தைத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் ஏகமனதாகத் தெரிவிப்பதை அரசு காணக் கூடியதாய் இருக்கும்.

வீடும் குடும்பமும் கண்களின் முன் தோன்ற—வேலையும் சம்பளமும் போய்விடுமே என்ற கலக்கத்தோடு—வேண்டா வெறுப்பு நிலையில்தான் விசுவாசப் பிரமாணத்தைத் தமிழ் அரசாங்க ஊழியர்கள் எடுக்கப்போகிறார்களே தவிர—புதிய அடக்குமுறை அரசியல் அமைப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை ஏற்றுக்கொண்டதல்ல என்பதை அரசாங்கம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

நான் இலங்கை வாழ் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல்லாயிரவர் சார்பில் அவர்களது மன நிலையை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டவும் உலகத்துக்கு வெளிப்படுத்தவும் புதிய குடியரசு தினத்தில் விசுவாசப் பிரமாணம் எடுக்காதுவிடும் பொருட்டு எனது பட்டதாரி மொழி பெயர்ப்பாளர் பதவியை ராஜினுமாச் செய்கின்றேன்.

இது ஒரு சமுதாயத்தின் மானப்பிரச்சினை மட்டுமல்ல—இது ஒரு சமுதாயத்தின் வாழ்வுப் பிரச்சினை• ஈழத்தின் மிகப் பழம் பெரும் தேசிய இனமான தமிழினத்தின் அழிவுக்கு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அத்திவாரமாய் அமைகிறது. இலங்கையில் உள்ள சிறுபான்மை இனத்தவர் மீது முடியரசு செலுத்த இச் சட்டம் வழிவகுக்கிறது.

என்னைப் பொறுத்தவரையில் அழிவில் இருந்து தமிழ் இனத்தைக் காப்பாற்றும் ஒரு பெரும் கடமை அலுவலகத்துக்கு வெளியே இருப்பதாக இச்சந்தர்ப்பத்தில் நான் உணருகிறேன்.

தமிழினத்தை அடிமைப்படுத்தும் புதிய குடியரசு அரசாங்கத்தில் உயர்ந்த சம்பளம் பெறும் பெரிய பதவி ஒன்றை வகிப்பதைவிட—தெருவிலே ஓர் ஏழையாய் நின்று தமிழரின் விடுதலைக்காக நடைபெறும் அறவழியிலான உரிமைப் போரில் பங்கு கொள்வதையே நான் பாக்கியமாகக் கருதுகிறேன்.

நான் பரம்பரைப் பணக்காரன் அல்ல—சேகரித்து வைத்த பணமும் என்னிடம் கிடையாது. ஓய்வு ஊதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் நான் பெறப்போவதில்லை. பத்து விரல்களை மட்டும் கொண்ட வெறும் கைகளோடு நான் அலுவலகத்திலி ருந்து வெளியேறுகிறேன்.

குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதிய பெரிய மனிதர்களுக்கு அவர்களது சிங்களச் சமுதாயத் தில் எவ்வளவு பற்று உண்டோ—அதேயளவு என்னைப் போன்ற சாதாரணமானவர்களுக்கும் எங்களுடைய தமிழ்ச் சமுதாயத்தில் பற்று உண்டு.

இவ்வண்ணம்,
தங்கள் உண்மையுள்ள,
காசி ஆனந்தன்.

* * *

1972 மே மாதம் 14ஆம் திகதி திருமலையில் தமிழர் கூட்டணி உதயமாயிற்று. புதிய அரசியல் அமைப்பின் பேராபத்தைப் புரிந்து கொண்ட இலங்கைத் தமிழினம் தந்தை செல்வா தலைமையில் ஒன்று பட்டு நிமிர்ந்து நின்றது. கவிஞர் காசி ஆனந்தன், வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி ஐயா ஆகியோர் தமிழர் கூட்டணியின் இணைச் செயலாளர்களாகத் தெரிவு செய்யப் பட்டார்கள். முதலாவது குடியரசு தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பதென்றும் பூரண ஹர்த்தால் மேற் கொள்வதென்றும் தமிழர் கூட்டணி முடிவு செய்தது. கவிஞர் மட்டக்களப்பில் குடியரசு பகிஷ்கரிப்பு நட வடிக்கைகளைக் கவனிப்பதற்காகப் புறப்பட்டார்.

மே 22 இல் தமிழ் ஈழம் முழுவதும் குமுறி நின்றது. மூன்று நாட்கள் தொடர்ந்து பாடசாலைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. யாழ் நகரில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கைதானார்கள். திருமலையில் நகரசபை மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டபத்தில் பறந்த சிங்கக்கொடியை இளைஞர்கள் அறுத்து எறிந்தார்கள்.

மட்டக்களப்பில் ஹர்த்தால் பூரணவெற்றி அளித்தது. நகரில் உள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. மாணவர்களில் 99வீதமானோர் பாடசாலைகளைப் பகிஷ்கரித்தார்கள். இளைஞர் சிலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்கள். ஊரெல்லாம் கறுப்புக்கொடிகள் இருட்கோலம் காட்டின.

*  *  *

1972 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இரவு மன்னூரில் தமிழர் கூட்டணியின் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் கவிஞர் காசி ஆனந்தன் ஏனைய தலைவர்களோடுமேடையில் வீற்றிருந்தார். பதவியைத் தமிழினத்தின் நல்வாழ்வுக்காக உதறி எறிந்த கவிஞரின் முகத்தில் தியாக ஒளி களைகட்டி நின்றது.

இரவு பத்து மணி இருக்கும். தலைவர்கள் இருந்த மேடையைச் சுற்றிப்பொலிசார் திடீர் என்று வளைத்துக்கொண்டார்கள். ஏன் இப்படி அவர்கள் மேடையை வளைக்கிறார்கள் என்பது முதலில் மக்களுக்கு விளங்கவில்லை. ஆனால் ஒரு சில நிமிடங்களில் அவர்களுக்கு எல்லாம் வெளிச்சமாகி விட்டது. ஆம் அன்றிரவுதான் பொலிசாரால் கவிஞர் கைது செய்யப்பட்டார்.

மன்னூர் பொலிஸ் நிலையத்தில் கவிஞரை அன்றிரவு கிழிசல் ஓலைப்பாயில் உறங்கவிட்டார்கள். மறுநாள் இரவை வவுனியா பொலிஸ் நிலையத்தில் அவர் கழித்தார். பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரச்செயலாளரால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரம் கவிஞர் கையில் வழங்கப்பட்டது. கவிஞர் தடுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல் கைதியாகக் கொழும்புக்கு அழைத்துச்செல்லப் பட்டார். கொள்ளுப்பிட்டி சி. ஐ. டி. அலுவலகத்தில் நடைபெற்ற இரண்டு மணிநேர விசாரணைக்குப்பின் கவி ஞரை அரசு வெலிக்கடைச் சிறைச்சாலை உள்ளே தள்ளி யது. 12-6-1972 அன்று இரவு காசி ஆனந்தன் வெலிக் கடைச் சிறைச்சாலையின் விருந்தாளியானார். ஒரு விடு தலைக் குயில் கூண்டில் அடைக்கப்பட்டது.

* * *

1972 ஜூன் தொடக்கம் இரண்டரை ஆண்டுகள் கவிஞர் காசி ஆனந்தன் வெலிக்கடைச் சிறைச்சாலையில் கொடிய சிறைவாசத்தை அனுபவித்தார். தமிழ் இனத் துக்காக அவர் தவம் இருந்தார் என்று சொல்வதே பொருத்தமானதாகும். இலங்கை சி. ஐ. டி. தலைமை நிலையமான நாலாவது மாடியில் வைத்துப் பொலிசார் இக்காலத்தில் பலமுறை கவிஞரை விசாரணை செய்தார் கள். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளைகளில் கவிஞர் கோட்டை பொலிஸ் நிலையக் காவல் முடுக்கிலும் கொம்பனித்தெரு பொலிஸ் நிலைய இருட் டறையிலும் அடைத்து வைக்கப்பட்டார்.

கவிஞர் மீது சி. ஐ. டி. பொலிசார் ஐந்து குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி விசாரணை நடத்தினர்கள்.

''உயிர் தமிழுக்கு' கவிதைத்தொகுப்பு மூலம் ஈழத் தமிழ் இளைஞர்களைத் தூண்டிவிட்டார்;' தமிழா உன்னைத் தான்' தொகுப்பு நூலில் வெளிவந்த சொற்பொழிவு களால் தமிழரை வெறிகொள்ளச் செய்தார்; புதிய குடி யரசு அரசியல் அமைப்புச் சட்டத்தில் கையெழுத் திட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அறுவர் இயற்கை மரணம் எய்தக்கூடாது' என்று பேசி அவர் களைக்கொலை செய்ய ஊக்கப்படுத்தினர்; புதிய குடியரசு தினத்தன்று மின்சாரக் கம்பங்களை வீழ்த்தப் புரட்சித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிட்டார்; குடியரசு அரசியல் அமைப்பை ஆதரித்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்யச் சதியாலோசனை நடத்தினர்; என்பவைகளே கவிஞர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களாகும்.

அபாண்டமான குற்றச்சாட்டுக்கள் கவிஞர் மீது சுமத்தப்பட்டன.

தான் நிகழ்த்திய சொற்பொழிவுகளையும் பாடிய கவிதைகளையும் கவிஞர் தன்னுடையவை என்று ஒப்புக் கொண்டார். வன்முறைச் சம்பவங்களில் தனக்குத் தொடர்பிருந்ததாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

சிறைவாசத்தில் கவிஞர் காசி ஆனந்தன் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல. கவிஞர் சிறைச்சாலையில் இருந்த போதுதமிழ் ஈழத்தின் காற்றெல்லாம் அவர் கவிதைகள் ஓங்கி ஒலித்தன. அவரோ சிறைச்சாலையில் அழுந்திக் கிடந்தார்.சிறைக் கோட்டத்தில் இருந்து கவிஞர் பாடிய ஒரு பாடல் நெஞ்சை உருக்குவதாகும்:—

''நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்!
நான் படும் பாட்டை
நானன்றி யார் அறிவார்?''

உலகத் தமிழர் விழிகள் அனைத்திலும் நீர்மல்கச் செய்த கவிஞரின் உயிர்க் கவிதை இது!

* * *

1972 ஜூன் மாதம் 10ஆம் திகதி கவிஞர் காசி ஆனந்தன் கைதான நாள் முதல் அவர் சிறைச்சாலையில் இருந்த ஒவ்வொரு நாளும் அவரை விடுதலை செய்யக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோரி உலகெலாம் தமிழர் குரலெழுப்பிக் கொண்டே இருந்தார்கள்.

தமிழ் நாட்டில் வெளிவரும் முரசொலி, தினத்தந்தி, அலேயோசை, நீட்டோலை முதலான பத்திரிகைகளும் இங்கிலாந்தில் வெளிவரும் லண்டன் முரசும், பாரீசில் வெளிவரும் தமிழோசையும், மலேசியாவில் வெளிவரும் கொள்கை முழக்கமும், அந்தமான் தீவில் வெளிவரும் அந்தமான் முரசும் கவிஞரை விடுதலை செய்யுமாறு இலங்கை அரசுக்கு அவ்வப்போது வேண்டுகோள் விடுத்தன.

உலகத் தமிழர் இளைஞர்பேரவைத் தலைவர் டாக்ட இரா. சனார்த்தனம் கவிஞரின் சிறைவாசத்தை வைத் எழுதிய 'இலங்கை மீண்டும் எரிகிறது' என்னும் நாடக தமிழ் நாட்டு மேடைகள் எல்லாம் அரங்கேறியது.

கவிஞரை சிறைவைத்த சிங்கள அரசைக் கண்டித் தமிழகக் கவிஞர்கள் சென்னையில் கவிஞர் கண்ணதாச தலைமையில் கவியரங்கம் நடத்தினார்கள்.

கவிஞரின் விடுதலைக்காக இலங்கைத் தமிழ் இளைஞர் இயக்கம் உண்ணாவிரதம் அனுஷ்டித்தது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சிறைக் கதவைத் திறந்து கவிக்குயிலை விடுதலை செய்யும்படி தமிழர் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல முறை கேட்டுக்கொண்டார்கள்.

ஈழத் தமிழர் விடுதலை வரலாற்றில் கவிஞர் ஓர் எழுச்சி அத்தியாயம் ஆனார்!

* * *

1971ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் நாள் வெலிக்கடைச் சிறைச்சாலையின் கதவுகள் திறந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஏகாதிபத்தியம் செந்தமிழ்க் கவிஞனை விடுதலை செய்தது. மெலிந்த கோலமும் வளர்ந்த தாடியுமாக வெளியே வந்த கவிஞரை தமிழுலகம் களிமனத்தோடும் ஒளி முகத்தோடும் வரவேற்று வாழ்த்தியது.

* * *

கவிஞர் காசி ஆனந்தன் ஈழத் தமிழர் விடுதலை வரலாற்றில் இன்று காவியத் தலைவனாய்த் திகழ்கிறார். இருபது ஆண்டுகள் இடைவிடாது போராடிய இலட்சிய வீரர் அவர். தமிழர் சரித்திரத்தில் களம் பாடிய கவிஞர்கள் பலர் வாழ்ந்திருக்கிறார்கள். உணர்ச்சிக் கவிஞரோ களம் ஆடிய கவிஞராய் உயர்ந்து நிற்கிறார்.

கவிஞரைக்கண்டு சிங்கள ஏகாதிபத்தியவாதிகள் திகலங்கும் அளவுக்கு தனிமனித வாழ்வில் கவிஞர் அப்படி ஒன்றும் பயங்கரவாதி அல்ல—நீதிக்கு அவர் துணை நிற்பதால் அநீதிக்கு முண்டு கொடுப்பவர்களுக்கு அவர் நெருப்பாய்த் தோன்றுகிறார் என்பதே உண்மையாகும்.

கவிஞர் காசி ஆனந்தன் அதோ—திரும்பவும் களத்தில் நின்று சிம்மக்குரலில் முழங்குகிறார்! இளைஞர்கள் அவர் பாதச் சுவடுகளைத் தொடர்ந்து ஓடுகிறார்கள். ஒரு விடுதலை இயக்கம் வேகமாக இயங்கிக்கொண்டிருக்கிறது.

---

விலை ரூபா: **1-50**

சுதந்திரன் அச்சகம்,
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு - 12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org